2010 ஏப்ரல் 27]

(ஆ) இலங்கை அகதிகளை, மலேசிய அரசு கைது செய்து வாட்டுவதைத் தடுக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே இருந்து அகதிகளாகச் சென்ற 75 குடும்பங்களை, அதில் 15 பச்சைக் குழந்தைகளும் அடங்குவர். அவர்களை கடந்த 3 நாட்களாக மலேசியா அரசாங்கம் கைது செய்து, அந்த நாட்டிற்குள்ளும் எடுத்துக்கொள்ளாமல், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திலும் ஒப்படைக்காமல், அவர்கள் பசியும் பட்டினியுமாக வாடிக்கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து இந்த அவையின்மூலமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, நம்முடைய மத்திய அரசின்மூலமாகத் தலையிட்டு, உடனடியாக அந்த 75 உயிர்களைக் காப்பாற்றுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கிற இந்த அதிமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை இந்த அவையின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

(இ) சோளிங்கர், அருள்மிகு யோக நரசிம்மர் ஆலயத்திற்கு ரோப் கார் வசதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் அருள்மிகு யோக நரசிம்மர் ஆலயத் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ரோப் கார் இயக்குவதும் விரைவில் தொடங்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். இதனால் அத்திருக்கோயில் பாலாலயம் செய்யப்பட்டு, மூலவர் தரிசனத்திற்குப் பக்தர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. வெளியிலே உள்ள உற்சவரை மட்டுமே தரிசனம் செய்கின்றார்கள். ஆந்திரா, கர்நாடகா, வட இந்தியா இன்னும் பல்வேறு இடங்களிலிருந்து வருகின்ற பக்தர்கள் மூலவரைத் தரிசிக்க முடியாமல் தவிக்கின்றார்கள். எனவே, ஆலயத் திருப்பணி எப்போது நிறைவுபெறும்? அதேபோல் சோளிங்கர்,

[திரு. அருள் அன்பரசு] [2010 ஏப்ரல் 27

அருள்மிகு யோக நரசிம்மர் ஆலயத்திற்கு ரோப் கார் அடிக்கல் நாட்டு விழா எப்போது தொடங்கும் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏன் இத்தனை பேர் எழுந்து நிற்கிறீர்கள்? எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சோளிங்கர் ரோப் கார் அமைப்பது பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் எல்லாம் கோரப்பட்டு இப்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பணி தொடங்குவதற்கான நாள் குறித்து நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் கலந்திருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடமும் கலந்து, இன்னும் 10 தினங்களுக்குள், வருகிற 12 ஆம் தேதி இந்து சமய அறநிலையத் துறையினுடைய மானியக் கோரிக்கைக்கு முன்னதாகவே அதற்கான பணி தொடக்க விழா சிறப்பாக நடைபெறும். அந்த விழாவை நடத்த வேண்டிய பொறுப்பையும் உறுப்பினர் அவர்களே ஏற்றுக்கொள்வார்கள். அதேபோல, மூலவருக்குத் திருப்பணி செய்வதற்கு அமைக்கப்பட்டிருக்கிற குழுவில் அவரும் ஓர் உறுப்பினராக இருக்கின்றார். ஆகவே, திருப்பணியை விரைவுபடுத்துவதில் அவருக்கும் பொறுப்பு இருக்கிறது என்பதைச் சொல்லி, ஏராளமான பக்தர்கள் தாராளமாக நிதியைத் தந்து கொண்டிருக்கிறார்கள். வெகு விரைவில் அந்தப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்படும். (குறுக்கீடுகள்)

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) மின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிலக்கரியின் சாம்பலை தனியார் சிமெண்ட் ஆலைகளுக்குக் குறைந்த விலையில் வழங்குவதால் அரசுக்கு ஏற்படும் நட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தமிழக அனல் மின் நிலையங்களிலிருந்து கிடைக்கும் நிலக்கரிச் சாம்பல் சிமெண்ட் ஆலைகளுக்கு சலுகை விலையில் வழங்கப்படுவதால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் இழப்பு குறித்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக